# விருப்பப் பாடம்-7BTAE1B-பெண்ணியம்

## அலகு - 1

## பெண்ணியம்

பெண்ணியம் என்பது அனைத்து வகைப் பெண்களுக்கும் சம உரிமை கிடைக்க போராடுதல்,ஆண், பெண் இருபாலரும் சமத்துவ உரிமைகளை ஒருங்கிணைந்து நிலைநாட்டுதல்.,பெண்கள் தாம் மேற்கொள்ளும் அனைத்துவகை வாழ்க்கை முறைகளுக்கும்,பணிகளுக்கும் உரிமையுடைவர்களாக இருத்தல்.,பெண்களின் உரிமைகளைப் பறித்து அவர்களைக் கட்டுப்படுத்துவனவற்றையும் அவர்களின் முன்னேற்றத்திற்கு கேடுவிளைவிப்பனவற்றையும் நீக்குதல்.

பெண்களுக்குப் போதிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களை ஒருங்கிணைத்து, இயக்கமாக்கி உரிமைகளுக்காகப் போராடச் செய்தல்.பெண்களுக்குப் பொருளாதாரச் சுதந்திரத்தை, அதனை அறவே களைதல்.பெண்களின் மீதான அனைத்துவகை ஒடுக்குமுறைகளையும் ஆராய்ந்து நிலைநாட்டுதல்.

ஆணாதிக்கத்தை அடையாளம்கண்டு அவற்றைப் போக்குவதற்கான தீர்வுகள் மற்றும் விடுதலைப் பெறுவதற்கான வழிமுறைகளைப் பின்பற்றுதல்.பெண்களின் நலனைப் போற்றுதலும் அதனை அடைதலும் அடைந்தவற்றைக் காத்தலும் , பெண் குழந்தை வன்முறைக்கு ஆளாகாமல் பாதுகாக்கப் படவேண்டும்.பெண் குழந்தைக்கான திருமண செலவு.,பெண்கள் முன்னேறிவிட்டதாக சொல்லுகிற காலத்திலும் பெண் குழந்தைக்கான கருவைத் தேர்ந்தெடுத்து கொலை செய்வது போன்ற கருத்துக்கள் பதிவு செய்யப்படுகின்றன.

## பெண்ணியப் பேரெழுச்சி

உழைக்கும் பெண்களின் உரிமைகளுக்காகவும், ஆண், பெண் சமத்துவத்திற்காகவும் 1910, மார்ச்-8 அன்று நியூயார்க் நகர வீதிகளில் வாக்குரிமை, 8 மணிநேர வேலை, கூலி உயர்வு ஆகிய கோரிக்கைகளில் ஆர்த்தெழுந்து போராடி 201 ஆண்டுகள் கடந்துவிட்டன. அந்நாளை நினைவுகூர்கையில் இச்சமூகத்தில் இன்று பெண்களின் நிலை என்ன என்று எண்ணிப் பார்க்கவேண்டிய அவசியமிருக்கிறது

## மரங்களை வெட்டாமல் தடுத்த சிப்கோ பெண்களின் புது வியூகம்!

#ChipkoMovement

இந்த உலகின் பலவித மாற்றங்கள் பெண்களால்தான் நிகழ்ந்துள்ளது. வேட்டையாடும் முறையிலிருந்து விவசாய முறைக்கு மனிதர்கள் மாறியதற்குப் பெண்களே பிரதான காரணம் என்கிறார்கள் ஆய்வாளர்கள். மறுசுழற்சி எனும் பெருங்கொடையைப் பெண்களுக்குத்தான் இயற்கை அளித்துள்ளது. இயற்கையோடு ஒன்றிணைந்த வாழ்வு என்பது, ஆண்களைவிடப் பெண்களுக்கு இயல்பானது. இந்த அடிப்படையின் தொடர்ச்சியே இயற்கையைக் காக்க, சிப்கோ இயக்கமாகப் பெண்கள் அணிவகுத்தது.

'சிப்கோ' என்றால், 'ஒட்டிக்கொள்ளுதல்' எனும் பொருள். இந்தப் பெண்கள், மரங்களை ஒட்டிக்கொண்டு அவற்றைக் காத்தது வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பதிவானது. இந்தப் போராட்டம் அப்போதைய பிரதமரான இந்திரா காந்தி கவனத்துக்குச் சென்றது. பின்னாளில் பத்திரிகையாளரும் சுற்றுச்சூழல் ஆர்வலருமான சுந்தர்லால் பகுகுணா, இந்தப் பெண்களின் போராட்டக் குணத்தை ஒருங்கிணைத்தார். இவரே, சிப்கோ இயக்கத்தை முன்னின்று வழிநடத்தினார். இமயமலைப் பகுதியில் உள்ள மரங்களைக்

காப்பதற்காகப் பல மைல் தூரம் நடைபயணம் மேற்கொண்டார். அந்தப் பகுதி மக்களுக்கு வாழ்வாதாரத்துக்கான பயிற்சிகளை அளிப்பதையும் தம் கடமையாகக் கொண்டிருந்தார். இதற்காக, அவர் பலவிதமான எதிர்ப்புகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஆனாலும், அவருக்கு உற்ற தோழமையாக நின்றவர்கள் பெண்களே. ஏனெனில், இவருடன் இணைந்த ஆண்களில் ஒரு சிலர், பணம் மற்றும் மதுவுக்கு விலைபோயினர். ஆனால், லட்சியத்துடன் நேர்மையாகப் பயணித்தவர்கள் பெண்களே. தங்களுக்குள் ஒரு குழுவை அமைத்து, இயற்கையைக் காக்க தீவிரமாகப் பணியாற்றினர். அந்தக் குழு, `லேடி டார்ஜான்' என்று அழைக்கப்பட்டது.

பெண்களின் இந்தப் போராட்டம், பொதுச்சமூகத்தை மட்டுமன்றி அரசையும் ஈர்த்தது. மரங்களை வெட்டும் முடிவை ரத்து செய்யவைத்தது. எந்தவொரு பெரிய வெற்றியும் எளிமையாகத்தான் தொடங்கியிருக்கும் என்பதற்கு சிப்கோ இயக்கப் பெண்கள் சிறந்த எடுத்துக்காட்டு. இன்று, அவர்களின் போராட்டத்தின் 45-வது ஆண்டு நினைவுகூர் தினம். இன்றும் பெண்கள் சந்திக்கும் முன்னெடுக்கும் போராட்டங்கள் பல. அதே உறுதியுடன் முயற்சிகள் வெல்லட்டும்.

பெண்ணியப் புதிய பார்வை

பெண்ணியத் திறனாய்வின் நோக்கங்களில் முக்கியமாகக் கருதப்படுவன: “பாலினடிப்படையில் பெண் ஒரே விதமாகச் சித்திரிக்கப்படுவதை ஆராய்வது” ,”பால் பாகுபாட்டினைக் கண்டறிந்து நோக்குவது”- ஆகியவற்றின் அடிப்படையில் பழந்தமிழ் இலக்கியங்களில் நமக்குத் தேவையான பார்வையைக் கருத்தில் கொள்வது.

பெண்ணோடு வாழ்வதே அறம் என்று கூறும்வள்ளுவம்

“பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்

திண்மை உண்டாகப் பெறின்”

## அதிகாரம் பற்றிய பொதுக்கொள்கை

அரசியல் அதிகாரத்தில் சமூக ஜனநாயகத்தில், பாதுகாப்பில், சமூகத்தின் உளவியல் மாற்றத்தில் பெண்களின் பங்கு என்ன? இன்றைய சூழலில் ஆணாதிக்கம் உறுதிபட்டிருப்பதையும், பெண்கள் மீதான வன்முறைகள் முன்னெப்போதைக் காட்டிலும் கொடூரமான விதத்தில் அதிகரித்து வருவதை எப்படி அணுகுவது? அதனை தடுப்பதற்கான வழிமுறைகள் என்ன? என்பதைப் பற்றி ஆராய வேண்டியிருக்கிறது. இதுபோல் பெண்களின் பாதுகாப்பு பற்றி உரக்கப்பேசும் இத்தகைய சூழலில் அதிரித்துவரும் உழைக்கும் பெண்களின் இன்றைய கோரிக்கைகள், உரிமைகள் என்ன? என்பதையும் பார்க்கவேண்டியிருக்கிறது.

**அதிகாரம்-ஆணவம்**

**“பாரத நாட்டிலுள்ள ஆதிக்க வர்க்கத்தினரின் பொழுதுபோக்கு, ஏழை தாழ்த்தப்பட்ட இனத்துப் பெண்களைக் கொடுமைக்கு இலக்காக்குவது” என்று ஒரு சமூக சிந்தனையாளர் வருத்தத்துடன் குறிப்பிடுகிறார். அடக்கி ஒடுக்கப்பட்டு வாழும் தலித்துகளின் வாழ்க்கைத்தரம் எவ்விதத்திலும் உயர்ந்து விடக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக உள்ள ஆதிக்க வெறியர்கள் தங்களது அரக்கப்பசிக்கு இரையாக்கிக் கொள்வது தலித் பெண்களையே.**

பெண்ணுக்கெதிரான வன்முறைகள்

“இரத்தம் சிந்துவது மட்டுமே வன்முறை ஆகாது. வேலையல்லாத் திண்டாட்டம்,மனிதன் வயிற்றில் மனிதன் அடிப்பது,மனிதனை மனிதன் ஏமாற்றுவது,சுரண்டுவது,கலப்படம்,பதுக்கல்,லஞ்சம்,கள்ளப்பணம் சேர்ப்பது எல்லாமே அப்பட்டமான வன்முறை தான்” என்பது வன்முறை பற்றிய எழுத்தாளர் அகிலனின் கருத்தாகும். "காலங்காலமாய் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையேயான சமனில்லா செல்வாக்கின் வெளிப்பாடே பெண்களுக்கு எதிரான வன்முறையாகும்";

"ஆண்களை விடத் தாழ்ந்தநிலைக்குப் பெண்களைத் தள்ளும் இக்கட்டானச் சமுதாயச் செயற்பாடுகளுள் ஒன்று பெண்களுக்கு எதிரான வன்முறையாகும்."[4]

**பெண்களின் அதிகார வாய்ப்புகள்**

**சமுதாய விழிப்புணர்ச்சியும், கல்வி கற்று உயர்தல் வேண்டுமென்னும் இலட்சியப் பிடிப்பும் பெண்களிடையே தோன்றத் தொடங்கின. மகிரிஷிகார்வே, ஜோதி பாபுலே, சந்தோஷிபாபுலே, கவிக்குயில் சரோஜினி**, இராஜாராம் மோகன்ராய், லோகமான்ய பாலகங்காதர திலகர், மகாத்மாகாந்திஜி, வீரேசலிங்கம் பந்துலு, துர்க்காபாய் தேஷ்முக் போன்ற தலைவர்களும், சமூக சீர்திருத்தவாதிகளும் பெண்கள் கல்வி கேள்விகளில் ஈடுபாடு கொண்டு சிறந்து விளங்கிட அடிகோலித் தந்தார்கள். மகளிர்க்கெனவே பள்ளிகள் கல்லூரிகள் தொடங்கப் பெற்றுப் பயன்தரத் தொடங்கின..

**‘’ஆண் பெண் பேதம் அகன்றிட சுதந்திர இந்தியா பெண்களுக்குச் சம உரிமை, சமதகுதி, சமதரம், சமவாய்ப்பு எனச் சட்டம் இயற்றியது**

**ஆயிரம் ஆயிரம் சட்டங்கள் இயற்றப்படலாம்.**

**எண்ணிக்கையிலடங்கா வாக்குறுதிகள் வழங்கப்படலாம். ஆனால் நடைமுறை அனுபவம் எத்தகையது என்பதை எண்ணிப் பார்க்கும் அவசிய நிலையில் நாம் இருக்கிறோம்.**

**அலகு-2**

பெண் மீதான வன்முறைக் கோட்பாடுகள்

பெண் மீதான வன்முறை என்பது பெண்களுக்கு எதிராய் ஆடவர் செலுத்தும் அதிகாரமாகும். பெண்களை அடித்தல், துன்புறுத்துதல், இழிச்சொற்களைப் பயன்படுத்துதல், பாலியல் வன்முறைச் செயல்களில் ஈடுபடுதல், கருக்கலைப்பு, பெண்சிசுக்கொலை, பெண்களைக் கடத்துதல், வரதட்சனைப் பிடிப்புகளால் பெண்ணை எரித்தல்,தற்கொலைக்கு இலக்காக்குதல், பரத்தமைத் தொழிலுக்கு உட்படுத்துதல் போன்றவை பெண்கள் மீதான வன்முறைகளாகத் தொடர்கின்றன.

எஸ்.ஜே. சூர்யா இயக்கத்தில் வெளி வந்த “வாலி” என்னும் தமிழ்த்திரைப்படத்தில் கதா நாயகன் தான் விரும்பிய பெண் தனக்கு கிடைக்காமல் தன் சகோதரனை மணந்துகொண்டான் என்கிற ஏமாற்றத்தின் உந்துதலால் அப்பெண் மீது வன்முறைகளைப் பலவாறு பிரயோகிக்கிறான்.

பெண்ணே பெண்ணுக்கு எதிரியா?

ஆதிகாலச் சமூகம் பெண்ணின் தலைமையில் தான் இயங்கி வருகிறது என்பது அப்பழுக்கற்ற உண்மையாகும்.
திருமணச் சடங்கில் பெண் பார்க்கும் படலத்தில் மாமியார் வதட்சனை கோரிப் பெரும் வாய்ப்பினைப் பெற்றுத் திகழ்கிறாள். சீர்செனத்திகளைப் பட்டியலிட்டுக் காட்டுவதில் பாவபுண்ணியம் பார்ப்பதில்லை.

## பெண் சிசுவதைதுயரத் தொடர் கதை

பெண் சிசுக்கொலை என்பது கருவில் இருக்கும் அல்லது பிறந்த குழந்தை பெண் குழந்தையாக இருந்தால் அதனை கருவில் இருக்கும் காலத்திலோ அல்லது பிறந்த பின்போ கொன்றொழிப்பதை பொதுவாகக் குறிக்கும். பிறந்தது முதல் ஒரு வயது வரையுள்ள குழந்தை *சிசு* என அழைக்கப்படுகிறது. கருவில் இருக்கும் பெண் குழந்தையைக் கொல்வது பெண் கருக்கொலை எனவும், பிறந்த பின் கொல்வது சிசுக் கொலை எனவும் வழங்கப்படுகிறது. இந்தியாவில் கிராமம் மற்றும் நகரம் என வேறுபாடின்றி இச்செயல் நடைபெறுகின்றது. ஆயினும் கிராமப்புறங்களில் இச்செயல் அதிகமாக நடைபெறுவதாகக் கருதப்படுகிறது. இச்செயலை உள்ளூர் கிராம மருத்துவச்சி என அழைக்கப்படுவோர் அல்லது அக்குடும்ப உறுப்பினர்களுள் தந்தை அல்லது தந்தை வழி தாத்தாவால் நிகழ்த்தப்படுகிறது. நகரப்பகுதிகளில் கதிரியக்க மின்னணுக் கருவிகள் மூலம் கருவில் இருக்கும் சிசு ஆணா அல்லது பெண்ணா என அறிந்து அதனைக்

கருவிலேயே அழித்தொழிக்கும் செயல் மருத்துவ மனைகளில் நன்கு படித்த மருத்துவரால் நிகழ்த்தப்படுகிறது. இந்தியா பெண்குழந்தைகளுக்கு பாதுகாப்பற்ற ஒரு நாடாகக் கருதப்படுகிறது.[1] இந்தியாவில் பெண் சிசுக்களில் இறப்பு விகிதம் ஆண் சிசுவின் இறப்பு விதத்தை விட 75 விழுக்காடு அதிகமுள்ளது. இது போன்ற பெண் சிசுக்கொலையினால் உலகெங்கும் ஆண் பெண் விகிதத்தில் ஏற்றத்தாழ்வான நிலை நிலவுகிறது. வளரும் நாடுகளில் இது மிக அதிகமாகவே காணப்படுகிறது. ஏறத்தாழ சமமாக இருக்கவேண்டிய பிறப்பு இறப்பு விகிதத்தில், அதிகரித்துவரும் பெண்கருக்கொலை, பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் எனவும். மேலும் குழந்தைகளும் பெண்களும் வன் புணர்ச்சிக்கு உள்ளாவர். ஒரு பெண்ணைப் பலர் மனைவியாகப் பங்கிட்டுக்கொள்ளும் நிலையும் ஏற்படலாம் என்றும் ஐக்கிய நாடுகள் எச்சரித்துள்ளன. இச்சூழல் ஏற்படின் அது சமுதாயப் பண்பாட்டினை, மதிப்பினைப் படிப்படியாகக் குறைத்து நெருக்கடி நிலையை ஏற்படுத்தலாம்.

## பெண் சிசுக்கொலை குறித்த சில உண்மைகள்

சமீபத்தில் ஐக்கிய நாடுகளின் சமூக மற்றும் பொருளாதாரத்துறை (United Nations Department of Economic and Social Affairs ( UN-DESA) வெளியிட்ட ஒரு அறிக்கையில் நாற்பது வருடங்களாகவே நூற்று ஐம்பது நாடுகளில் இரண்டு நாடுகளைத் தவிர பெண் குழந்தைகள் இறப்புவிகிதம் குறைவான அளவிலேயே உள்ளது. பெண் சிசு இறப்பு விகிதம் அதிகமுள்ள நாடுகளுள் இந்தியாவும் சீனாவும் மற்ற நாடுகளை விஞ்சி நிற்கின்றன. உலகளவில் 122 சிசு மரணங்களில் 100 பெண் சிசுவாக உள்ளது. இதனுடன் ஒப்பிடுகையில் சீனாவில் 100 சிசு மரணங்களில் 70 பெண் சிசுவாக உள்ளன.[3] அண்மைக்கால யூனிசெஃப் அறிக்கையின்படி இந்திய நாட்டில் 50 மில்லியன் சிறுமியரும், பெண்களும் தொடர்ந்த பெண்பால் வேற்றுமையுணர்வு காரணமாகக் கொல்லப்பட்டுள்ளனர். உலகின் பல நாடுகளில் ஏறத்தாழ 100 ஆண் குழந்தைகள் பிறக்கும்போது 105 பெண் குழந்தைகள் பிறக்கிறார்கள். ஆனால் இந்தியாவில் 100 ஆண்களுக்கு

93க்கும் குறைவாகவே பெண்கள் இருக்கிறார்கள். இந்தியாவில் ஒவ்வொரு நாளும் 2000 பெண் சிசுக்கள் சட்டத்திற்குப் புறம்பாகக் கருவிலேயே கலைக்கப்படுவதாக ஐக்கிய நாடுகள் கூறுகின்றன.

## ஆடி வரும் தேனை வரவேற்போம்

'பெண்ணில்லாமல் வீடு வீடாகுமா? பெண்ணால் தான் சிறந்த குடும்பத்தை உருவாக்க முடியும். தன்னை அழித்துக் கொண்டு பிறர் நலம் பேணம் பண்பு பெண்ணுக்கு மட்டுமே உரியது.' என்றெல்லாம் காலம் காலமாகப் புகழ் பாடி நலம் பெற்று வரும் சமுதாயம் பெண் குழந்தையை பெற்ற தாயாலேயே புறக்கணிக்கப்படுகிறது. நடைமுறைகளிலும் செய்தித் தாள்களிலும் அறியலாகும் இத்தகைய செய்திகள் சிந்தையை தொட்டு வருந்த வைக்கும் செய்திகளாகும்.

'பெண்ணே பிறந்துவிட்டால்
கண்ணில் வைத்துக் காப்பேன் ஐயா
ஆணே பிறந்தால்.....
ஆணையும் அப்படி ஐயா வேற்றுமையில்லை!'

என்னும் பாவேந்தர் பாரதிதாசனின் கூற்றை நினைவில் கொண்டு காடு மணக்கவரும் கற்பூரப் பெட்டகத்தை, ஆடி வரும் தேனை, பேசும் பொற்சித்திரத்தை, சின்னஞ்சிறுகிளியை வரவேற்போம்! வாழ்த்துவோம்.

## பெண்ணின் பருவ நிலைகளும் மனநிலையும்

பெண்என்னும் சொல் பல பொருள்களில் பயன்படுகின்றது. பால் பகுப்பில் பெண் பால் எல்லா உயிரினங்களினதும் பெண்" பாலாரை வயது வேறுபாடின்றிக் குறிக்கப் பயன்படுகின்றது.

பிறந்த முதல் பருவம் அடையும் வரை அதவது 0 முதல் 8 வயது வரை சிறுமிகள் எனப்படுவர் இந்த வயதில் இவர்களுக்கு பெண்களுக்கு உரிய வளர்ச்சி இருக்கும்.கன்னி எனறால் பெண்கள் பருவம் அடைந்து திருமணம் ஆகும் வரை நிலை கன்னி என்று அழைக்கப்படுவர்கள்.பெண் எனறால் அவள் திருமணம் ஆகி குழந்தை பேறு பெற்றவர்கள் பெண் என்று அழைக்கப்படுவர்கள். இவை தவிர சிறுவயதுப் பெண்ணைப் பொதுவாகச் *சிறுமி*என்றும், திருமணம் ஆகாத பெண்களைக் *கன்னி*என்றும்

குறிப்பது உண்டு. பொதுவாகச் சிறுமி நிலையைத் தாண்டியவர்கள் பெண்கள் கருதுவதும் சமுதாயத்தில் அழைக்கபட்டு வருகிறது.

## பருவ மாற்றம்

குழந்தைப் பருவத்திற்கும், வளர்ச்சி முற்றுப் பெற்ற பருவத்திற்கும் இடைப்பட்ட காலத்தை வளரிளம் அல்லது பருவ வயது என்று கூறுகிறோம், 9 வயது முதல் வயது 16 வரையிலான காலம் தான் வளரிளம் பருவ வயதுக் காலம் ஆகும். தன்னுடைய உடல் மற்றும் மன வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் பருவம் இது. இந்த பருவத்தில் எடையும், உயரமும் மிக வேகமாக அதிகரிக்கின்றது. இந்த பருவத்தில்தான் நோய்களில் இருந்து பாதுகாப்பு, மனம் மற்றும் சமுதாய நலன்களில் ஏற்படும் சிக்கல்கள் குறித்து ஒரு பெண் தன்னுடைய வாழ்கை ஆரோக்கியமான வாழ்வை பெற உணவு, உடை, தன்சுத்தம், பாதுகாப்பான சுற்றுப்புற சூழ்நிலையில் வாழ்வது பற்றி அதிகமாக அறிந்து இருக்க வேண்டும்.

## பெண்களின் உடல் மற்றும் அதன் செயல்களின் ஏற்படும் மாற்றம்

உடலாலும், மனதாலும் மிக வேகமாக மாறுதல்களை சந்திக்கும் பருவம் இந்த வளரிளம் பருவம். இயக்குநீர்கள் சுரப்பில் ஏற்படும் மாறுதல்களால் பால் உறுப்புகளின் வளர்ச்சியும், உருவ அமைப்பில் மாறுதல்களும் ஏற்படுகின்றன.

## அலகு-3

## உழைக்கும் பெண்களின் உயர்வு

திருப்பூரின் அடையாளம் பின்னலாடைத் தொழில். இந்த அடையாளத்தை ஏற்படுத்த ஆண்கள் எந்த அளவு உழைத்திருக்கிறார்களோ அதே அளவுக்குப் பெண்களும் உழைத்திருக்கிறார்கள். இன்றைக்கும் உழைத்துக்கொண்டே இருக்கிறார்கள்.

திருப்பூரின் பின்னலாடை உற்பத்தியில் சரிபாதியாக ஆண்களோடு பெண்களும் பகிர்ந்துகொள்ளும் அளவுக்கு இந்தத் துறை பெண்களின் அளவற்ற உழைப்பை நம்பியே இருக்கிறது.

பின்னலாடை நிறுவனங்களில் இரவு பகலாக உழைக்கும் பெண்களுக்கு, பல்வேறு எதிர்பார்ப்புகள், தேவைகள், ஏக்கங்கள் உள்ளதாகச் சொல்கின்றனர் திருப்பூர் பெண் தொழிலாளர்கள்.

புத்தாயிரத்தாண்டுச் சவால்கள்:

“இன்று குழந்தைகள், எனினும் இந்த நாட்டினை ஆளப் பிறந்தீர்” என்று இன்றைய குழந்தைகளின் எதிர்கால பொறுப்பு பற்றி இனிதாய்ப் பாடினான் பாரதிப் புலவன். பெண்கள் தங்களது திறனுக்கேற்ற கல்வி வாய்ப்பினைத் தேர்ந்தெடுத்து கொள்வதன் வாயிலாகச் சமுதாயத்துக்குப் பயன் பட வாய்ப்பு ஏற்ப்படும்.முடிவெடுக்கும் திறன், ஊக்கத்திறன், ஆளுமை திறன்,பகுத்தறிவயும் திறன்,தன்னம்பிக்கை விடாமுயற்சி அயரா உழைப்பார்வம் எனத் திறமைகளை பெறவும் வளர்க்கவும் வாய்ப்புகள் கூடி வரும்.

மூன்றாம் உலகின் நடப்பும் எதிர்பார்ப்பும்.

பாலின உறவுகளின் அடிப்படை, இயற்கை இயல்பு நிலைகள் பற்றிய பூர்வாங்கமான ஆராய்தலின் பயனாக பெண்கள் தங்களது வாழ்வுச் சூழ்நிலையில் சில பல அதிகார வரம்புகளை கண்டடைய வேண்டியுள்ளது அவசியமாகும். சமூகத்தில் உண்மையிலேயேபெண் வகிக்கும் தகுதி நிலை எந்த அளவினதாய் இருக்க வேண்டும். அவை ஆண்-பெண் இருபாலரிடையே எந்த அளவில் மாறுபட்டதாய் இருக்க வேண்டும் என்பன போன்ற ஐயங்கள் ஏற்படலாம்.

மகளிர் மேம்பாடு: பங்கும் பணிகளும்

தமிழகத்தில் பெண்களின் நிலையில் நல்ல முன்னேற்றங்கள் இருந்தாலும், சமூக, பொருளாதார அரசியல் ரீதியில் பின்தங்கிய நிலையிலேயே இருந்தனர். நலத் திட்டங்கள் பல இருந்தாலும், வறுமை நிலையை ஒழிக்க முடியாமல் இருந்தது. அரசு நலத் திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு, குறைவான நிலையில் இருந்தது.

பெண்கள் மத்தியில் கல்வி, சுகாதாரம், பற்றிய போதிய விழிப்புணர்வு இல்லாமல் இருந்தது. நலப் பணிகளை மக்களே கேட்டு பெற்றுக் கொள்ளும் (Demand creation) உணர்வு குறைந்த அளவிலேயே இருந்தது.

**தமிழகத்திலுள்ள அனைத்து ஏழை மகளிரையும், சமூகரீதியாகவும், பொரருளாதார ரீதியாகவும், மேம்பாடு அடைய செய்வது, தாங்களாகவே தங்கள் வாழ்கை தரத்தை உயர்த்திக் கொள்ள செய்து " சுய சார்பு " நிலைய அடைய செய்வது.**

## மகளிர் மேம்பாடு தொலைநிலைக் கல்வியும் தொழில்நுட்பக் கல்வியும்

**'அடுப்பூதும் பெண்களுக்குப் படபெதற்கு' என்னும் கருத்துக்கள் பொய்த்துப் போய்க் கொண்டிக்கின்ற காலகட்டமிது. எல்லாரும் சமவாய்ப்பைப் பெறுகின்ற இலக்கை நோக்கிப் பயணம் செய்கின்ற சமூகச் சூழலில் பெண்கள் எல்லாத் தளங்களிலும் தங்கள் திறமைகளை வெளிக் கொணர்ந்து கொண்டிருக்கிறார்கள்.**

## அனைத்துலக மகளிர் தொழில்நுட்பவியல் மையம்

**அனைத்துலக மகளிர் தொழில்நுட்பவியல் (tribune centre) மேம்பாட்டு மையம் ( 777 உலக நாடுகள் (pluza) மாளிகை நியூயார்க் அமெரிக்க ஐக்கிய நாடு ) 1984ஆம் ஆண்டு செப்டெம்பர் திங்களில் நிறுவப்பட்டது.**

**ஏழை கிராம்ப்புற மகளிர் நடைமுறை சாத்தியக் கூறுகளை அனுசரித்தே எதிலும் ஈடுபாடு கொள்ளும் தன்மை கொண்டவர்கள் அன்றாட மனநிறைவின் அடிப்படையிலேயே அவர்களது முடிவெடுக்கும் தன்மை அமைந்திருக்கும். புதிய தொழில்நுட்ப அடிப்படையிலான பணிகள் அவர்களது வாழ்க்கை மேம்பாட்டுக்கு உதவுகிறது எனக் கருதினால் மட்டுமே இம்முறையினைப் பின்பற்றுவார்கள். எனவே,**

**அவர்களுக்கு எளிதில் கைவரப் பெறுவதற்கான தொழில்நுட்ப திறன்களை வளர்ப்பதிலேயே அக்கறை காட்டி அவர்கள் அவற்றைப் பின்பற்றிப் பயன் நுகர வழிகோலிட வேண்டும்.**

## அலகு-4

விடுதலைப் போரில் வீரமகளிர்

**செய்த தியாகம் பற்றிய செய்திகள் 'வீடுதான் உலகம்' என்றிருந்த பெண்களின் நிலை இந்திய விடுதலைப்போரில் வீரமகளிர் விடுதலைப் போராட்டத்தால் மாறிக் காணப்படுகின்றன. கஸ்தூரிபாய், நேருவின் தாயார் சொரூபராணி, ருக்மனி லட்சுமிபதி, தில்லையாடி வள்ளியம்மை, அன்னிபெசன்ட் அம்மையார், வீரமங்கை அஞ்சலையம்மாள் ஆகியோரின் தியாகம் பற்றிய செய்திகள் எடுத்துரைக்கப்படுகின்றன**

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பெண்களும் பெருந்திரளாகப் பங்கேற்றனர். அகிம்சைப் போராட்டம் மட்டுமல்லாமல் ஆயுதமேந்திய போராட்டங்களிலும் பெண்கள் பலர் பங்கேற்று உயிர்த்தியாகம் செய்துள்ளனர். கொடுமையான தண்டனைகளையும் பெற்றுள்ளனர். அப்படிப்பட்டவர்களில் முக்கியமான சிலர்:

உஷா மேத்தா

**குஜராத்தில் பிறந்த இவர் 1928-ல் சைமன் கமிஷனை எதிர்த்து நடந்த போராட்டத்தில் பங்கேற்று 'சைமன் வெளிய போ' என்று முழக்கம் எழுப்பிய போது, இவருடைய வயது எட்டு. காந்திய வழியில் போராடிய இவர் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தின்போது நண்பர்கள் சிலருடன் சேர்ந்து 'காங்கிரஸ் ரேடியோ' என்ற ரகசிய வானொலி ஒலிபரப்பைத் தொடங்கினார். இதற்காகச் சிறைக்குச் சென்றவர் 1946-ல் விடுதலையானார்.**

துர்காவதி தேவி

1907-ல் வங்கத்தில் பிறந்து விடுதலைக்காக ஆயுதமேந்திப் போராடியவர். 1928-ல் பிரிட்டிஷ் அதிகாரி ஜான் பி.சாண்டர்ஸைக் கொன்றபின் பகத் சிங், ராஜகுரு ஆகியோர் காவல் துறையிடமிருந்து தப்பிக்க இவர் உதவினார். அதன் பிறகு ஹெய்லி பிரபுவைக் கொல்ல முயன்றதற்காக மூன்றாண்டு சிறைத் தண்டனை பெற்றார்.

### சுனிதி சௌத்ரி

இவரும் சாந்தி கோஷ் என்பவரும் வங்கத்தில் கொமில்லா மாவட்ட மாஜிஸ்திரேட் சார்லஸ் ஸ்டீவன்ஸை 1931-ல் சுட்டுக் கொன்றதற்காகச் சிறைக்குச் சென்றனர். அப்போது சுனிதிக்கு வயது 14, சாந்திக்கு 15. ஆங்கிலேய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி 1942-ல் இருவரையும் விடுவிக்கச் செய்தார் காந்தி.

### பீனா தாஸ்

1911-ல் கொல்கத்தா வில் பிறந்தவர். 1932 பிப்ரவரி 6 அன்று கொல்கத்தா பல்கலைக் கழகத்தில் ஒரு விழாவில் பங்கேற்ற ஆங்கிலேய அரசின் வங்க ஆளுநர் ஸ்டான்லி ஜாக்ஸனைச் சுட்டுக் கொல்ல முயன்றதற்காகச் சிறைத் தண்டனை கிடைத்தது. 1939-ல் விடுதலையான பின் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். ‘வெள்ளையனே வெளியேறு’ இயக்கத்தில் பங்கேற்று 1942 முதல் 45 வரை சிறையில் அடைக்கப்பட்டார். இவருடைய அக்கா கல்யாணி தாஸும் விடுதலைப் போராட்ட வீராங்கனையே.

### ராணி காயிதின்ல்யு

மணிப்பூரில் இருந்த ‘ஹெராகா’ என்ற மத அமைப்பில் சேர்ந்தார். அந்த அமைப்பு மணிப்பூர் உள்ளிட்ட நாகா பகுதிகளிலிருந்து ஆங்கிலேயர்களை விரட்டி அடிப்பதற்கான

அரசியல் இயக்கமாக உருப்பெற்றது. விடுதலைப் போராட்டத்தில் மிகத் தீவிரமாகப் பங்கேற்ற காயிதின்ல்யு, 1932-ல் தனது 16-வது வயதில் ஆயுள் தண்டனை பெற்றார். 1947-ல் நாடு விடுதலை பெற்ற பிறகு விடுவிக்கப்பட்டார். இவருக்கு 'ராணி' என்ற பட்டத்தை நேரு வழங்கினார்.

## அக்கம்மா செரியன்

திருவிதாங்கூர் சமஸ் தானத்தில் பிறந்தவர். 1938-ல் தனது ஆசிரியப் பணியை ராஜினாமா செய்துவிட்டு காங்கிரஸ் கட்சியில் இணைந்து விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றார். கட்சிக்குத் தடை விதிக்கப்பட்டதை எதிர்த்து 20,000 பேர் கொண்ட பேரணியை வழிநடத்தினார். ஆங்கிலேயக் காவலர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தத் தயாரானபோது, "என்னை முதலில் சுடுங்கள்" என்று துணிச்சலாக முன்வந்தார். இதையறிந்த காந்தி, இவரை 'திருவிதாங்கூரின் ஜான்சிராணி' என்று புகழ்ந்தார்.

## கமலாதேவி சட்டோபாத்யாயா

மங்களூருவில் பிறந்த இவர் 1919-ல் 16 வயதில் விதவையானார். அன்றைய சமுதாயத்தின் கடும் எதிர்ப்பை மீறி ஹரீந்திரநாத் என்ற கலைஞரை மணந்து அவருடன் லண்டனில் குடியேறினார். காந்தியின் 'ஒத்துழை யாமை இயக்க'த்தால் ஈர்க்கப்பட்டுத் தாய்நாடு திரும்பி, சமூக முன்னேற் றத்துக்காக காந்தி தொடங்கிய 'சேவா தள'த்தில் இணைந்தார். 'உப்பு சத்தியாகிரக'த்தில் பங்கேற்றுச் சிறைக்குச் சென்றார்.

## அருணா ஆசஃப் அலி

1909-ல் ஹரியாணா வில் பிறந்தவர். 1930-ல் உப்பு சத்தியா கிரகத்தில் பங்கேற்றுச் சிறைக்குச் சென்று இரண்டு ஆண்டுகளில் விடுவிக்கப்பட்டார். 1942 ஆகஸ்ட் 8 அன்று பம்பாய் மாநாட்டில் ‘வெள்ளையனே வெளியேறு’ தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை அடுத்து காங்கிரஸ் முக்கியத் தலைவர்கள் அனைவரும் கைதாயினர். மறுநாள் அதே மாநாட்டில் காங்கிரஸ் கொடியை ஏற்றிவைத்து, ‘வெள்ளையனே வெளியேறு’ போராட்டத்தைத் தொடங்கிவைத்தார். ‘வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் கதாநாயகி’ என்று அழைக்கப்படுகிறார்.

## கனகலதா பரூவா

அசாமில் 1924-ல் பிறந்த வர். ‘வெள்ளை யனே வெளியேறு’ இயக்கத்தின்போது, ஒரு காவல் நிலையத்தில் தேசியக் கொடியை ஏற்றுவதற்காக நடத்தப்பட்ட ஊர்வலத்தில் முன்வரிசையில் சென்றார். அப்போது காவல்துறை நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 18 வயதில் உயிர் நீத்தார்.

## போகேஸ்வரி ஃபுக்கானனி

1885-ல் அசாமில் பிறந்த இவர் எட்டுக் குழந்தைகளுக்குத் தாயாக இருந்தபோதும் அகிம்சைவழி விடுதலைப் போராட்டங்களில் தீவிரமாகப் பங்கேற்றார். 1942-ல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின்போது காவல்துறை தாக்குதல் நடத்தியது. அப்போது ஒரு காவலர் தேசியக் கொடியை அவமதித்ததற்காகத் தன் கையிலிருந்த கொடிக்கம்பால் அவரைத் தாக்கினார் போகேஸ்வரி. இதையடுத்து, காவலர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அன்னிபெசன்ட் அம்மையார்

"மங்கையராய் பிறந்திட நல்ல மாதவம் செய்திடல் வேண்டும்" என்ற பாரதியின் பாடலுக்கு இணங்க பெண் பிறப்பிற்கு பெருமை சேர்க்கும் விதமாக 1 ஆம் தேதி அக்டோபர் மாதம் 1847 இல் ஐரிஸ் வம்சாவழியில் பிறந்தவர் அன்னிபெசண்ட் அம்மையார்.

சுதந்திர காற்றை சுவாசிக்க இயலாமல் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தினால் அடிமை இருளில் அவதிப்பட்ட இந்தியர்களை விடுவிக்கவும்,ஆங்கிலேயர்களை குடைகவிழ்ந்து கோல் சாய்ந்து;கொடியும் வீழ்ந்து;கோட்டை கொத்தளங்களை விட்டுத் தங்கள் குடிப்படைகளோடு நாட்டை விட்டு வெளியேறச் செய்த பேராளிகளில் இவரும் ஒருவர். இவர் நமது நாட்டின் விடுதலைக்கும்,இந்திய பெண்களின் வீட்டு விடுதலைக்கும் துணைநின்ற மாதரசி அன்னிபெசண்ட் அம்மையார்.

அரசியல் மற்றும் சமூகத்தில் ஈடுபாடு மிக்கவராய் திகழ்ந்த இவர்,இந்திய விடுதலைக்காக காங்கிரஸ் பேரியக்கத்தில் சேர்ந்தார்.காங்கிரஸ் இயக்கத்தில் தலைமை வகித்த முதல் பெண் அன்னிபெசண்ட் அம்மையாரே! இவர் ஓராண்டு காங்கிரஸ் இயக்கத்தில் தலைவியாக பொறுப்பேற்றார். இவர் இயற்கையிலேயே புரட்சி மனப்பான்மையுடையவராதலால் ஆங்கிலேயரின் அடக்குமுறை இவரை மிகவும் பாதித்தது.

விடுதலை போராட்டத்திற்காக 'காமன் வீல்' என்ற வாரப்பத்திரிக்கையையும் 'நியூ இந்தியா' என்ற தின பத்திரிக்கையையும் ஆரம்பித்தார். இந்தியாவுக்கு பிரிட்டிஷ் காமன்வெல்த்துக்குள் சுயாட்சி வேண்டும் என்று கிளர்ச்சி நடத்தினார்.அதற்காக 'ஹோம் ரூல் லீக்' என்ற இயக்கத்தை தொடங்கி ஆங்கிலேயருக்கு எதிராக போராடியவர்.1907 ல் சூரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில்,மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் ஏற்பட்ட பிளவை,லக்னோவில் நடைபெற்ற மாநாட்டில் இரு பிரிவினரையும் இணைத்து வெற்றி பெற்றவர்

.இந்தியாவில் மட்டுமல்லாமல் பிரிட்டனுக்கு. சென்ற போதும் இந்திய விடுதலைக்காக பேசியவர். சமூகம், ஆன்மீகம், தேச ஒற்றுமையை வலியுறுத்தும் விதத்தில் பல்வேறு சேவை செய்துள்ளர்.

பெண் குழந்தைகளுக்கும் மனைவிக்கும் கல்வி போதிப்பேன்.பெண்களுக்கு 21வயதுக்குள் திருமணம் செய்து வைக்க மாட்டேன்,விதவை மறுமணத்தை ஆதரிப்பேன் என்ற நிபந்தனையை விதித்தவர். படிப்பின் முக்கியத்துவம் உணர்ந்த அன்னிபெசண்ட் அம்மையார் ஏழை குழந்தைகளின் படிப்பிற்கும்,பசிக்கும் வழிசெய்ய வேண்டும் என்று விரும்பினார். இவர் ஏழை குழந்தைகளுக்கு பாடம் சொல்லி தருவது மட்டும் போதாது வயிற்றுக்கு சோறிடல் வேண்டும் என்று வலியுறுத்தினார். ஆனால் அவர் இறந்த சில ஆண்டுக்கு பிறகு தான் மதிய உணவு திட்டம் கொண்டுவரப்பட்டது.இவர் 1904 ல் பெண்கள் பள்ளியை துவங்கினார்.தாழ்த்தப்பட்டவர்களுக்காக சென்னை அடையாறு உட்பட ஊரெங்கும் பள்ளிகளை ஆரம்பித்தார்.

சங்க கால மகளிர் நிலை

சங்க காலம் தமிழ் இலக்கிய வரலாற்றின் பொற்காலம். பழந்தமிழ்ப் பண்பாட்டின் நிலைக்களனாய் அமைந்தவை சங்ககால மகளிரின் அரும்பண்புகள். ஆணும், பெண்ணும் இணைந்து நடத்துகின்ற இல்லற வாழ்வே முழுமையான வாழ்வு என மேற்கொள்ளப்பட்டது. மகளிருக்குத் தொல்காப்பியர் பின்வரும் பண்புகள் இன்றியமையாதன என எடுத்தோதுகின்றார்.

"உயிரினும் சிறந்தன்ற நாணே நாணினும் செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று" (தொல், களவியல் - 23)

"அச்சமும் நாணும் மடனுமுந் துறதல் நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப" (தொல், களவியல் - 8)

இதன் வழி ஆண்களுக்குப் பெருமையும் வீரமும் வேண்டப்படுவன போல பெண்களுக்கு அச்சமும் நாணமும் சிறந்தது என்று குறிப்பிடுகிறார்.

சங்ககால மகளிர்நிலை என்பது பெண்பாற்புலவர்கள், பெண்மாந்தர்கள் என்ற இரு தன்மைகளில் வெளிப்படுகின்றது. சங்க இலக்கியத்திலுள்ள பெண்பாற்புலவர்கள் எண்ணிக்கையில் உள்ள முரண்கள், பெண்பாற்புலவர்களாக அடையாளப்படுத்தப்படுவதில் உள்ள சிக்கல்கள் முதலியன இந்த நூற்றாண்டிலும் நீடித்துக் கொண்டுதான் வருகின்றன. சங்க கால மகளிர் நிலை பற்றி அறியும் பொழுதும் பெண்குழந்தைகள் போற்றி பாராட்டப்பட்டதற்கும்,வெறுக்கப்பட்டதற்கும் எவ்வித சான்றுகளும் இல்லை. அரசியலில் பெண்களின் ஈடுபாடு, பெண்களின் சிறப்புப் பற்றியும், அவர்கள் சங்க காலத்தில் விருந்தோம்பும் விதம் பற்றியும் அறியப்படுகிறது

. .

தொழில்களில் சங்க காலப் பெண்கள்

நிலத்தின் தன்மைக்கு ஏற்றார் போல பெண்களின் சிறப்பு திணைவாரியாகவும்,தொழில் ரீதியாகவும், சங்க காலப் பெண்கள் எவ்வாறு மேன்மைப் பெற்றனர் என்பதும் உணர்த்தப்படுகிறது.

சமுதாயப் பார்வையில் பெண்கள்

சமுதாயத்தில் பெண்கள் எவ்வாறு மதிக்கப்படுகின்றனர் எனும் செய்தியும், ஆணிற்கும், பெண்ணிற்கும் என்ன வேறுபாடு, அவன் வலிமையானவன், பெண் மென்மையானவள் எனும் பாங்கு எடுத்துரைக்கப்படுகிறது.

மதமும் பெண்ணடிமைத்தனமும்

மதங்கள் பெண்களை எவ்வாறெல்லாம் அடிமைத்தனமாக எண்ணியது, அவை எடுத்துக் கூறிய செய்திகள் பற்றியும் எடுத்துரைக்கப்படுகிறது. மேலும் பெண்கள் பதிவிரதையாக இருந்த செயலும் கூறப்படுகிறது.

## அலகு-5

உளவியல் அடிப்படையிலான பெண்ண்டிமைத்தனம்

உளவியல் ரீதியாக பெண்கள் அடிமைத்தனத்தைஅடிப்படுத்தப்பட்டவிதம் எடுத்துரைக்கப்படுகிறது, சமதர்ம சமுதாயம் வளரவேண்டுமென்றால் பெண்கள் தன்னை

வலிமை வாய்ந்தவனாக கருதவேண்டும் பற்றிய செய்திகளும் எடுத்துரைக்கப்படுகின்றன.

பெண்ணியப் பார்வையில் சிலம்பு

பெண்களை பற்றி சிலப்பதிகாரம் உயர்வாகக்கூறப்படும் செய்திகள் பேசப்படுகின்றன கண்ணகியின் உயர்வும், மாதவியின் குணச்சிறப்பும், மணிமேகலையின் துறவும் சிறப்பாக எடுத்துரைக்கப்படுகிறது.

தொல்காப்பியரின்  பாட்டி

தொல்காப்பியத்தில் பாட்டி எனும் சொல் பன்றி, நாய், நரி, ஆகியவற்றின் பெயர்களாக்க்குறிக்கப்பட்டமை எடுத்துரைக்கப்படுகிறது.

கதைப்பாடல்களில் பெண்ணின் பலமும், ஆணின், பலவீனமும்

நாட்டுப்புறக் கதைப்பாடல்களில் பெண்ணின் பலமும், ஆணின், பலவீனங்களும் எடுத்துரைக்கப்படுகிறது. தெய்வங்களில் மாரியம்மன், காளியம்மன், பற்றிய செய்திகள், சிறப்பாக அறிப்படுகிறது.

திருக்குரானில் பெண்களின் திருமண உரிமைகள்

திருக்குரான் குறிப்பிடும் பெண்களின் மேன்மைகள் எடுத்துரைக்கப்படுகின

இரட்டைக்காப்பியங்களில் படைப்பாளியின் உளவியலும் மேனிலையாக்கமும்.

இரட்டைக்காப்பியங்களின் ஆசிரியர்கள் பெண்களை உளவியல் கருத்துக்களுடன் பொருத்தி காப்பியத்தை படைத்தவரும் உணரப்படுகிறது. படைப்பாசிரியர்களின் மேனிலைத்தன்மைபோற்றப்படுகிறது.

சிலம்பில் “பத்தினி” சொல்லாட்சி.

‘பத்தினி’ எனும் சொல்லாட்சி சிலம்பல் கையாளப்பட்டதிறன். அதன் சிறப்பு முழுவதும் எடுத்துரைக்கப்படுகிறது.

தொல்காப்பியரின் கற்பியற் கொள்கைகள்

தொல்காப்பியர் குறிப்பிடும் பெண்ணிற்குரிய பண்புகள் பற்றியும், நாடக இலக்கியத்தில் பெண்களின் தனித்துவம் பற்றியும்,

பெண்ணின் ஆற்றல், பெண்ணின் அறிவு அதிகாரப்பகிர்வு பற்றிய செய்திகளும் இடம்பெற்றுள்ளது

பார்வை நூல்கள் ; பெண்ணியச் சுவடுகள்

டாக்டர்.வாசுகி ஜெயரத்னம்